18

## ஆய்வுப்பொருள்: மூன்று:- இறை கட்டளைகள் வழி நீதியும் ஒழுக்கமும் நிறைந்த வாழ்வு

### 3.2. ஒழுக்கமும் நேர்மையும் நிறைந்த இறை சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்

எங்கள் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கு!

ஊருக்கான பாதையைச் சீரமைத்துத் தா!

அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் குறை!

எங்கள் சம்பளத்தை உயர்த்து!

வேலைவாய்ப்பைத் தா!

எங்கள் வாக்குரிமையை மறுக்காதே!

**இவ்வகையான பிரச்சனைகளால் பாதிக்கப்படுபவர் யார்?**

**உம்மால் நாட்டில் செய்யக் கூடிய பணிகள் எவையெனக் கூறுவீர்?**

ஒழுக்கமும் நேர்மையும் மிகுந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பயணத்தில் தடைகளும் சவால்களும் எழுவது இயல்பு.

**விடையளிப்போம்**

நீர் நினைக்குமளவு ஒழுக்கமான, வளமான சமூகத்தைக் கட்டியெழுப்பும் பயணத்தில்.....

- தடை ஏற்படுத்தக் கூடிய 2 காரணங்கள்.
  1. ---------------------------------------------------
  2. --------------------------------------------------
- பெற்றோருக்குரிய கடமை.
  ---------------------------------------------------
- பிள்ளைக்குரிய கடமை.
  ---------------------------------------------------
- அதிகாரிக்குரிய கடமை.
  ---------------------------------------------------
- மக்களுக்குரிய கடமை.
  ---------------------------------------------------

குறிப்பாக அதிகாரிகள் தங்களுடைய பணிகளையும் பொறுப்புகளையும் சரியான முறையில் நிறைவேற்றாமையே இவ்வாறான பிரச்சினைகளுக்கு காரணமாக கூறப்படுகின்றது. இதனால் மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதில்லை. ஆகவே, அவர்கள் இவ்வாறான தடைகளை மேற்கொள்ள தம் வேண்டுகோளை முன்னிலைப்படுத்தி தமது தேவைகளை எவ்வகையிலாவது நிறைவேற்ற வேண்டுமென நினைக்கின்றனர். சிலவேளைகளில் மற்றவர்களின் உடமைகளையோ, உயிர்களையோ மதிக்காமல் தங்களின் தேவைகளை நிறைவேற்றுவதையே குறிக்கோளாகக் கொள்கின்றனர்.

இவ்வாறான நிலைமைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமிருந்தால் நாட்டின் ஒழுக்கம் சீரழிந்து போகும். இவ்வளவு காலமும் காலங்காலமாய் கட்டியெழுப்பிய சமுதாயத்தை, அதன் விழுமியங்களை அழிவிற்கே இட்டுச் செல்லும். ஆகவே, இவ்வகை பிரச்சினைகளுக்கான தீர்வை வீடுகளிலிருந்தே முன்வைக்க வேண்டும்.

பெற்றோரை, பெரியோரை மதித்து நட எனக்கூறும் நான்காம் கற்பனை மறக்கப்படுவதால் மனிதர்களுக்கிடையிலான உறவு கேள்விக்குறியாக்கப்பட்டு ஒருவரையொருவர் மதிக்கின்ற பண்பு மழுங்கடிக்கப்படுகின்றது.

உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ்நாள்கள் நீடிக்கும்படி, உன் தந்தையையும் உன் தாயையும் மதித்து நட.

(வி.ப. 20:12)

மனிதரிடையே உறவைக் கட்டியெழுப்பும் கட்டளைகளில் ஒன்றாகிய 4ம் கட்டளை

- பெற்றோர்
- பிள்ளைகள்
- அதிகாரிகள்
- குடிமக்கள்

ஆகியோருக்கு தமது சமூகத்தை நேர்மையும் ஒழுக்கமும் உடையதாகக் கட்டியெழுப்ப வேண்டிய உரிமையும் கடமையும் உண்டு என வலியுறுத்துகின்றது.

திருமண அருளடையாளத்தின் மூலம்
கிறிஸ்தவ குடும்ப வாழ்க்கையில்
வீடு என்பது புனிதமான இடமாகும்.
ஆகவே தாய், தந்தை, பிள்ளைகளுக்கிடையிலான உறவு
திருக்குடும்பத்தைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.
சமூகவியலில் ''குடும்பம் பல பொதுத் தேவைகளை நிறைவேற்றும்
ஒரு நிறுவகம்'' என்று கூறப்படுகின்றது.
குடும்பத்தின் வழியாக ஒருவர் சமூகத்தில் தொடர்பு கொள்கின்றார்.
சமூகத்தில் காணப்படும் சமயம், கல்வி, அரசியல்,
பொருளாதாரம், நீதி, கலாசாரம் என்பன காணப்படுவது
குடும்பம் எனும் இல்லத் திருச்சபையின்
அடித்தளத்திலிருந்தேயாகும்.



இலவச விநியோகத்திற்காக

இயல்பிலே நன்மைத்தனத்துடன் பிறக்கும் குழந்தை நல்லவராவதும் தீயவராவதும் நாம் வளரும் வாழும் சமூகத்தினாலே. எனவே, நல்ல குடிமக்களை சமூகத்திற்கு உருவாக்கி வழங்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களைச் சார்ந்ததே.

ஒரு மனிதனை
ஒன்றிணைப்பும், சமூகப் பொறுப்பும்
உடையவனாக மாற்றும் இயல்பு அவனது சுற்றாடலான அவனது இல்லமே. ஆகவே,
சமூகத்தை அச்சுறுத்தக் கூடிய, இழிவுபடுத்தக் கூடிய நாட்டங்களைத் தவிர்க்குமாறு
பெற்றோர் தம் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டும்.

கத்தோலிக்க திருச்சபையின்
மறைக்கல்வி # 2224

பிள்ளைகள் தமது ஆளுமையை வளர்ப்பதற்கு பெற்றோரையே தம் முதல் மாதிரிகையாகக் கொள்வர். எனவே, பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு முன்மாதிரிகை வழங்குவதன் வழியாக அவர்களின் ஆளுமை உருவாக்கத்தில் திடமான பங்கு வகிக்க முடியும். அதனால் வீட்டில் பெற்றோரும் பிள்ளைகளும் தத்தம் பொறுப்புகளை உணர்ந்து சரியான முறையில் நிறைவேற்றுவதன் மூலம் சமூகக் கடமையை எதிர்கொள்ள ஆயத்தமான ஆளுமைப் பண்புகொண்ட பிரஜையாகச் செயற்பட முடியும்.

தந்தையரே, உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். மாறாக அவர்களை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்துத் திருத்தி, அறிவு புகட்டி வளர்த்து வாருங்கள்.

(எபே. 6:4)



இலவச விநியோகத்திற்காக

## பெற்றோரின் கடமைகளும் பொறுப்புகளும்



- தமது பிள்ளைகளுக்கு திருமுழுக்குக் கொடுப்பதன் மூலம் திருச்சபையின் அங்கத்தவராக பிள்ளைகளை வளர்த்தல்.
- செபம், மறை உண்மைகள், உண்மைக் கிறிஸ்தவனாக வாழ்வதுபற்றி கல்வியூட்டல்.
- குடும்பமாக இறைவனுக்கு நன்றிச் செபம் செலுத்தும் வகையில் பிள்ளைகளை இறைவனுடன் உரையாட வைத்தல்.
- பிள்ளைகளுக்குத் தேவையான கல்வியறிவு, ஒழுக்கம் என்பவற்றைக் கற்பித்தல்.
- அன்பு, இரக்கம், பொறுமை, விட்டுக்கொடுத்தல் ஆகிய பண்புகளை பிள்ளைகளுக்கு முன்மாதிரிகையாக எடுத்துக் காட்டல்.
- தம் பிள்ளைகளுக்கு கடமைகள், பொறுப்புகளை பகிர்ந்து வழங்கி அவர்களை எதிர்கால தலைமைத்துவத்திற்கு ஆயத்தப்படுத்தல்.
- உடல், உள, ஆன்மீகத் தேவைகளை அறிந்து அதை நிறைவேற்றுவதன் மூலம் ஒரு முழு மனிதனாக மாற்றுதல்.



இலவச விநியோகத்திற்காக

## பிள்ளைகளின் கடமைகளும் பொறுப்புகளும்.



- பெற்றோருக்கு அன்பும் மரியாதையும் செய்வர்.
- பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து செவிமடுப்பர்.
- கற்றலில் உச்சப்பயனுள்ள கல்வியைப் பெறுவர்.
- தமது நடத்தைகளால் தம் பெற்றோருக்கும் தம் சமூகத்திற்கும் பெருமை சேர்ப்பர்.
- குடும்பத்தில் தமக்குரிய கடமைகளை தாமாகவே முன்வந்து நிறைவேற்றுவர்.
- பெற்றோர் மட்டில் தம் கடமையை தாமாக நிறைவேற்றுவர்.
- ஆன்மீகத்திலும் மறையறிவிலும் அக்கறையுடன் வளர்வர்.
- பெற்றோர், பெரியோரை மதித்து கனம்பண்ணுவர்.

இவ்வுலகில் உள்ள உங்கள் தலைவர்களுக்கு, முற்றிலும் கீழ்ப்படியுங்கள். மனிதர்களுக்கு உகந்தவர்களாகுமாறு வேலை செய்வதாகக் காட்டிக் கொள்ளாமல், ஆண்டவருக்கு அஞ்சி முழுமனத்தோடு வேலை செய்யுங்கள்.

(கொலோ. 3:22)



இலவச விநியோகத்திற்காக

தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் அவர்கள் பணிந்து கீழ்ப்படிய வேண்டும் அனைத்து நற்செயல்களையும் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும். எவரையும் பழித்துரைக்கலாகாது சண்டையிடலாகாது கனிந்த உள்ளத்தினராய் மக்கள் அனைவரோடும் நிறைந்த பணிவுடன் பழக வேண்டும்.

(தீத். 3:1-2)

**விடை தருக.**

- கொலோசையர் 3:22, தீத்து 3:1-2 இன் படி கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை நிரப்புக.

| அதிகாரிகளுக்குரிய பொறுப்புகள் | மக்களுக்குரிய பொறுப்புகள் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

அதிகாரிகள் இறைவனின் சித்தத்தின்படி மக்களுக்கு சேவை செய்ய அழைக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு நாமும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பணிவான, ஒழுக்கமுள்ள, வளமான சமூகத்தை நோக்கிய பயணத்தில் அரசியலுக்கும் திருச்சபைக்குமிடையில் மிக நெருங்கிய தொடர்பைக் கட்டியெழுப்புவது மிகப் பயனுள்ளது.



இலவச விநியோகத்திற்காக

**அதிகாரிகளின் கடமைகள்**

- தமது தலைமைத்துவத்தில் தமது பொறுப்பை நேர்மையான முறையில் நிறைவேற்றுதல்.
- மக்களின் தேவைகளை நிறைவேற்றும்போது இன, சமய, உயர்நிலை வித்தியாசமின்றி உழைக்க வேண்டும்.
- தமது பணி தேவைப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பணியாற்ற முன்வரல் வேண்டும்.
- பணம், பதவி, பெயர் எடுக்கும் நோக்கின்றி நற்சமூகத்தை உருவாக்கும் எண்ணத்துடன் பணியாற்ற வேண்டும்.
- நாட்டின் சமயத் தலைவர்களின் அறிவுரைகளின் பேரில் தமது பணியை மேற்கொள்ள வேண்டும்.
- சமூகநலனில் அக்கறை கொண்ட பொதுநலமுடையோராய் வாழவேண்டும்.

**மக்களின் கடமைகள்**

- அதிகாரிகளை மதித்தலும் கீழ்ப்படிதலும்.
- உரிய முறையில் வரி செலுத்துதல்.
- சம்பளத்திற்கு அடிமையாகாமல் உண்மையாகப் பணியாற்றுதல்.
- அதிகாரிகளைப் பாராட்டுவதோடு அவர்களது பணிக்கு உதவுதல்.
- பணி சிறக்க பயனுள்ள ஆலோசனைகளை வழங்குதல்.
- அதிகாரிகளின் பணியை ஆசீர்வதிக்குமாறு இறைவனை வேண்டுதல் செய்தல்.

## விடையளிப்போம்

1. நற்பண்புள்ள சமூகத்தை உருவாக்குவதில் தந்தை, தாய், பிள்ளைகளின் கடமைகள் மூன்றைப் பெயரிடுக.
2. எமது நாட்டின் தலைவர்கள் தமது பணியைச் சரியான முறையில் நிறைவேற்றுவதற்குத் தேவையான வரம் வேண்டி செபம் ஒன்றைத் தயாரிக்குக.



இலவச விநியோகத்திற்காக